21 DEC 2009
சேப்பாக்கம், சென்னை-5

<u>சுருக்கம்</u>

கேளிக்கை வரி – 2009–10 – தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுவரி விலக்களிக்கப்பட்டது – மாநகராட்சி, நகராட்சி பேரூராட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு – ஈடுகட்டுதல் – ரூ.27.00 கோடி ஒதுக்கீடு – உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொகை பகிர்ந்தளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசாணை (நிலை) எண். 251 நாள்: 18.12.2009.

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.37778/2008/தி2 நாள் 18.11.2009
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.22830/2009/உ4 நாள் 05.12.2009
3. சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் நாள் 09.12.2009.
4. அரசாணை (நிலை) எண். 243 ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 11.12.2009.

------

<u>ஆணை:</u>

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளதால் நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு 2009-10ஆம் ஆண்டில் ஏற்படும் வருவாயினை ஈடு செய்ய வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் வரவு செலவு திட்ட மானியக் கோரிக்கை எண். 10–ன் கீழ், ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தி ஏழு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2. மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.27.00 கோடி நிதியினை (ரூபாய் இருபத்தி ஏழு கோடி மட்டும்) விடுவித்து நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி இத்தொகை நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரிடம் (CMD TUFIDCO) ஒப்படைக்கப்பட்டு அவரால் பராமரிக்கப்படுகிறது. இந்நிதி மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளுக்காக துறைத் தலைவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3. இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்டுள்ள தங்களது கடிதங்களில் 2009–10ஆம் ஆண்டு கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளனர்.

அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

நகராட்சி நிர்வாக இயக்குநர்

| வரிசை எண் | பணியின் விவரம் | ஒதுக்கீடு கோரப்பட்டுள்ள தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | இனாம் கரூர், தாந்தோணி, சிவகாசி, அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சிப் பகுதிகளின் சாலை மேம்பாட்டுப் பணி | ரூ.3.665கோடி (3.67கோடி) |
| 2 | 2009–2010ஆம் ஆண்டிற்கான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் | ரூ.6.00கோடி |
| 3 | பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி காஞ்சிபுரம் நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏழு வளர்ச்சிப் பணிகள் | ரூ.3.23கோடி |
| 4 | தூத்துக்குடி பக்கிள் ஓடை இரண்டாம் கட்டப் பணிகள் | ரூ.10.00கோடி |
| | மொத்தம் | ரூ.22.90கோடி |

பேரூராட்சி இயக்குநர்

| வரிசை எண் | பணியின் விவரம் | ஒதுக்கீடு செய்யக் கோரப்பட்டுள்ள தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | தர்மபுரி மற்றும் சிவகங்கை உதவி இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்ட ஒரு உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு தலா ரூ.30.00லட்சம் வீதம் | ரூ.0.60கோடி |
| 2 | 29 பேரூராட்சிகளில் பூங்கா அமைத்தல் (மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் செவிலிமேடு பேரூராட்சியில் ரூபாய் 15.00இலட்சம் செலவில் பூங்கா அமைத்தல் உட்பட) | ரூ.1.91கோடி |
| 3 | 26 பேரூராட்சிகளில் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் | ரூ.3.61கோடி |
| 4 | அண்ணா மறுமலர்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள 45 சமுதாயக்கூடங்களில் உணவுக்கூடம் மற்றும் சமையலறை கட்டுதல் | ரூ.3.375கோடி |
| | மொத்தம் | ரூ.9.495கோடி |

சென்னை மாநகராட்சி ஆணையர்

| வரிசை எண் | பணியின் விவரம் | ஒதுக்கீடு செய்யக் கோரப்பட்டுள்ள தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையின் மேம்பாட்டுப் பணிகள் | ரூ.8.93கோடி |
| 2 | விக்டோரியா பப்ளிக் ஹால் மராமத்துப் பணி | ரூ.2.27கோடி |
| | மொத்தம் | ரூ.11.20கோடி |

4. மேற்சொன்ன பணிகளில் நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைப்பின் கீழ் வரும் வரிசை எண் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணி மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் தலைப்பின் கீழ் வரிசை எண் 2–ல் அடங்கும் செவிலிமேடு பேரூராட்சியில் ரூபாய் 15.00இலட்சம் செலவில் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளுக்கு கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய்யும் நிதி அல்லது உட்கட்டமைப்பு பற்றாக்குறை ஈடுசெய்யும் நிதியிலிருந்து வழங்கலாமென மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 06.11.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைப்பின் கீழ் வரும் வரிசை எண் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கான நிதியினை கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய்யும் நிதியிலிருந்து பெற செயற்குறிப்பு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொண்டு ஏற்கெனவே அரசாணை (நிலை) எண்.156 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.09.2009–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

5. மேற்கண்ட சூழ்நிலையில், 2009–10ஆம் ஆண்டு கேளிக்கை வரிவருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதி ரூ.27.00கோடியினை நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு பகிர்ந்தளிப்பது குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், பணிகளின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்சொன்ன ரூ.27 கோடி நிதியினை கீழ்க்கண்டவாறு துறைத்தலைவர்களுக்கு பகிர்ந்தளித்து அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண் | துறைத் தலைவர் | பணிகளின் விவரம் | வழங்கப்படும் தொகை (கோடியில்) |
|---|---|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக இயக்குநர் | 2009–10ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் | ரூ.6.00 |
| | | பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி காஞ்சிபுரம் நகரை அழகுபடுத்துவதற்கான ஏழு வளர்ச்சிப் பணிகள் | ரூ.3.23 |
| | | இனாம் கரூர், தாந்தோணி, சிவகாசி, அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சி பகுதிகளின் சாலை மேம்பாட்டுப் பணி | ரூ.3.62 |
| | | தூத்துக்குடி பக்கிள் ஓடை இரண்டாம் கட்டப்பணி | ரூ.6.00 |
| 2 | பேரூராட்சி இயக்குநர் | பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி செவிலிமேடு பஞ்சாயத்து பகுதிக்குட்பட்ட எல்லப்ப நகரிலுள்ள பூங்காவினை மேம்படுத்துதல் | ரூ.0.15 |

| | | | |
|---|---|---|---|
| 3 | சென்னை மாநகராட்சி ஆணையர் | தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் செய்வதற்கான பணிகள் | ரூ.8.00 (இதற்கான மதிப்பீட்டுத் தொகையின் மீதத் தொகை ரூ.97.00 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்) |
| | | மொத்தம் | ரூ.27.00 கோடி |

6. மேற்குறிப்பிட்டபடி பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் விடுவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு விடுவிக்கும்போது, மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான மொத்தத் தொகையில் 50% தொகையை முன்பணமாகவும், மீதி 50% தொகையை பணி முடிவுற்றவுடன் விடுவிக்க வேண்டுமென்றும், மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களே வழங்கலாமென்றும், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த காலமுறை அறிக்கை அவ்வப்போது துறைத் தலைவர் அவர்களால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை –9
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், சென்னை –35
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், சென்னை மாநகராட்சி சென்னை –3
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–5
உள்ளாட்சி தணிக்கை அலுவலர்
மாநில கணக்காய்வுத் துறை தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9
மாநில கணக்காயர், சென்னை– 18
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
ந.நி.(ம)கு.வ. துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9
நிதித்துறை, சென்னை–9 / வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அ.2) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர் 21/12/09